# இலங்கை மருத்துவ பேரவை

## வெற்றிடம்

### பரீட்சைகள் பிரிவு தலைவர் பதவி

EPRM மற்றும் ERPDS பரீட்சைகளை நடாத்தும் இலங்கை மருத்துவ பேரவையின் பரீட்சை பிரிவை இயக்கும் சவாலை ஏற்கத் தயாராக இருக்கும் அனுபவமிக்க மற்றும் ஆற்றல் மிக்க மருத்துவ அல்லது பல் மருத்துவ நிபுணர் / கல்வியாளர் ஒருவரின் சேவையை இலங்கை மருத்துவ பேரவை நாடுகின்றது. பின்வருவனவற்றைக் கொண்ட மருத்துவ அல்லது பல் மருத்துவர்களிடமிருந்து இலங்கை மருத்துவ பேரவை விண்ணப்பங்களை அழைக்கின்றது.

1. **இலங்கை மருத்துவ பேரவையில் மருத்துவராக / பல்மருத்துவராக பதிவு செய்யபட்டவர்**

   **மற்றும்**

   **சபையினால் சான்றுபடுத்திய நிபுணர்**
   **(A Board Certified Specialist)**

   **அல்லது**

   **PhD அல்லது அதற்கு சமமான தகைமையைப் பெற்றவர்**

2. **கற்பித்தல் மற்றும் மருத்துவ / பல் மருத்துவ பரீட்சைகளை நடாத்துவதில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்தின் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு.**

இது 02 வருட காலத்திற்கான முழு நேர அடிப்படையிலான நியமனமாகும். மருத்துவ / பல் மருத்துவ பீடத்தின் ஓய்வினை விடுமுறையில் (Sabbatical Leave) இருக்கும் கல்வியாளர்கள் விண்ணப்பிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மருத்துவ பேரவையினால் தீர்மானிக்கப்படும்.

பதவிக்கான கடமை மற்றும் பொறுப்புகள் (குறிப்பு விதிமுறைகள்) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்குக் கிடைக்கப்பெறும்.

பொருத்தமான விண்ணப்பதாரர்கள் இல்லாவிட்டால் பகுதிநேர விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிக்கும் நடைமுறை:**

விண்ணப்பதாரர்கள், அவர்கள் இந்த பதவிக்கு தகுதியானவர் என்பதை முன்னிலைப்படுத்த முழுமையான சுய தரவை ஒரு முகப்புக் கடிதத்துடன் (Covering Letter) (தகுந்த இடங்களில் விண்ணப்பங்கள் நிறுவனத்தின் தலைமை ஊடாக அனுப்பப்பட வேண்டும்) சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை **23.12.2024**ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது registrar@slmc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**மருத்துவர் H.D.B. ஹேரத்,**
**பதிவாளர்,**
**இலங்கை மருத்துவ பேரவை,**
**31, நொரிஸ் கெனல் வீதி,**
**கொழும்பு 10.**
**08.12.2024**